# பணிப் பெண்களின் கடமைகள்

**இஸ்லாத்தில் பணிப் பெண்களுக்கும் சில கடமைகளும், உரிமைகளும் உள்ளன. இச்சிறிய பிரசுரத்தில் பணிப் பெண்கள் பேன வேண்டிய சில கடமைகளை அவதானிப்போம். அவைகள் பின்வருமாறு:**

1-சபையிலும், மறைவிலும் மற்றும் சாதாரண நேரங்களிலும் அல்லாஹ் நம்மை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து அவனுக்கு அஞ்சி நடத்தல்.

2-குறிப்பிட்ட நேரத்தில் தொழுகையை நிறைவேற்றல், தொழுகையின் நேரம் போய் விடும் அளவுக்கு வேலையை முற்படுத்தாமல் இருந்தல். அல்லாஹ் இறை விசுவாசிகளைப் பற்றி குறிப்பிடும் போது (அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தொழுகையைப் பேனி வருவார்கள்) என குறிப்பிடுகிறான்.

3- பூரணமாக பர்தாவை கடைப்பிடித்தல். குறிப்பாக அந்நிய ஆண்களின் முன் தனது அங்கங்களை மறைத்துக் கொள்ளல்.

4- அந்நிய ஆடவர்களுடன் தனித்திருப்பதைத் தவிர்ந்து கொள்ளல். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரியே, ஏனெனில் ஒரு பெண் ஓர் (அந்திய) ஆணுடன் தனித்திருக்கும் போது அங்கே மூன்றாவதாக (அவர்களை பாவத்தின் பால் தூண்ட) ஷைத்தான் இருக்கிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

5-பாவத்தை அஞ்சி உடல் மற்றும், ஆடைகளின் அலங்காரத்தை வெளிப்படுத்தாது தவிர்ந்து கொள்ளல். மேலும் ஆடவரைக் கவரக் கூடிய வாசனைத் திரவியங்கள், மையிடுதல் போன்றவற்றை தவிர்ந்து கொள்ளல்.

6-வீட்டு வேலைகளை வீட்டுக் காரர்கள் விரும்பும் விதத்தில் நேர்த்தியாக செய்தல். நீங்கள் ஒரு வேலையைச் செய்தால் அதை நேர்த்தியாக செய்வதையே அல்லாஹ் விரும்புகிறான். என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள். (அல் ஹதீஸ்)

7- மற்றவர்களின் குற்றங்களைத் துருவியாராய்தல் ஒற்றுக் கேட்டல் மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்தல் மற்றும் தேவையற்ற விடயங்களில் தலையிடுதல் போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளல். இது பற்றி இறைவன் கூறும் போது (நீங்கள் அடுத்தவர்களின் குறைகளை துருவித்துருவி ஆராயாதீர்கள் உங்களில் சிலர் சிலரைப் புறம் பேசவும் வேண்டாம்). என்றும் இதுபற்றி நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் சிறந்த விடயம் தனக்கு தேவையற்ற விடயங்களை விட்டு விடுவதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்).

8- மற்றவர்கள் தன்னோடு எப்படி நடக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கிறோமோ அதே போன்று நாமும் மற்றவர்களோடு நற்பண்போடும், புன்முறுவலுடனும் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக சிறுவர்களுடனும், முதியவர்களுடனும் அன்பாக நடந்து கொள்ளல், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு பொறுமையோடு முகங்கொடுத்தல்.

09- உண்மையுடனும், நம்பிக்கையுடனும் நடந்து கொள்ளல், மற்றவர்களின் பொருட்களை அவர்களின் அனுமதியின்றி எடுக்காமல் தவிர்ந்து கொள்ளல், மேலும் திருடாமையிலிருந்தும், தீய பார்வையிலுருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளல் போன்ற சிறந்த பண்புகளை கொண்டிருத்தல்.

10- தனது ஆரோக்கியத்தையும், பிறர் ஆரோக்கியத்தையும் பேண சுத்தமாக இருப்பதோடு தொடர்ச்சியாக நகம் வெட்டுதல்.

11- உறங்கும் போதும், உண்ணும் போதும் குறிப்பாக காலையிலும், மாலையிலும் அதிகமாக அல்லாஹ்வை திக்ரு செய்தல்.

12- சூனியம், மந்திரம், ஷிர்க்கான தாயத்துகளை விட்டும் ஒதுங்கி இருத்தல். நன்மைகளை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் ஏற்படுத்த முடியாது. தீமைகளை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் தடுக்கவும் இயலாயாது. இதைப் பற்றி அல்லாஹ் கூறும் போது "யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன் என்கிறான்.

13- அல்லாஹ்வுடைய கட்டலைகளை ஏற்பது கொண்டும் அவனது விளக்கல்களை தவிர்ந்து நடப்பது கொண்டும், மார்க்கத்தில் உறுதியாக இருத்தல்.

14-ஓய்வு நேரங்களில் பயன்மிக்க நல்ல நூல்களைப் படிப்பதிலும், நல்லறிஞ்சர்களின் ஒலி, ஒளி நாடாக்கைகளைக் கேட்டுபபன் பெறுவதில் கூடிய கவனம் செலுத்தல்.